**செய்தி வெளியீடு எண் : 596** **நாள்: 13.04.2022**

**செய்தி வெளியீடு**

**'பாரத ரத்னா' டாக்டர் அம்பேத்கர் அவர்களின் 132–ஆவது பிறந்த நாள் விழா மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாடு அரசின் சார்பில் அண்ணல் அம்பேத்கர் மணிமண்டபத்தில் உள்ள அவரது திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தவுள்ளார்.**

சட்ட மேதை, சமுதாயச் சிற்பி, ஒடுக்கப்பட்ட மக்களின் விடிவெள்ளி அண்ணல் அம்பேத்கர் அவர்களின் 132–ஆவது பிறந்த நாளை முன்னிட்டு, சென்னை, ராஜா அண்ணாமலைபுரத்தில் அமைந்துள்ள அண்ணல் அம்பேத்கர் மணிமண்டபத்தில் உள்ள அன்னாரின் திருவுருவச் சிலைக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் நாளை (14.04.2022) காலை தமிழ்நாடு அரசின் சார்பில், மாலை அணிவித்து மரியாதை செலுத்த உள்ளார்கள்.

சாதி, இனம், மொழி என்கிற வரையறைகளைத் தாண்டி, ஒடுக்கப்பட்ட மக்களின் ஓங்கியொலிக்கும் குரலாய் என்றும் நின்றவர்; அம்மக்கள் ஏற்றம் பெற்றிட தன் வாழ்வுதனையே அர்ப்பணித்தவர்; இந்திய அரசியல் சாசனத்தை உருவாக்கிய சட்டச்சிற்பி; 'வடநாட்டுப் பெரியார்' என்று அனைவராலும் போற்றிப் புகழப்பட்டவர்; பின்னாளில் பாபாசாகேப் அம்பேத்கர் என்றும், அண்ணல் அம்பேத்கர் என்றும் அழைக்கப்பட்டவர். 'பகுத்தறிவுப் பகலவன்' தந்தை பெரியாரின் பேரன்புக்குப் பாத்திரமான புரட்சியாளர் பீமாராவ் ராம்ஜி அம்பேத்கர் அவர்கள், மத்தியப் பிரதேச மாநிலத்தில் 1891 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 14–ஆம் நாள் ராம்ஜி மாலோஜி சக்பால் – பீமாபாய் ஆகியோரின் 14–வது குழந்தையாகப் பிறந்தார்.

சிறு வயதில் நாம் காணும் சம்பவங்களாலும், உணரப்படும் வலிகளாலும் எழும் கேள்விகள் வேள்விகளாகி, நமது வாழ்கையைத் தீர்மானிக்கும் சக்தியாக உருவெடுக்கும். அந்தக் கேள்விகளுக்கான தேடலே சிலருக்கு வாழ்க்கையின் லட்சியமாகவும் அமைந்திடும். அந்தவகையில் வசதியான குடும்பத்திலே பிறந்திருந்தாலும், தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சார்ந்திருந்ததால், படிக்கின்ற பள்ளியிலே தனிமைப்படுத்தப்பட்டதும், பயணங்களின் போது புறக்கணிக்கப்பட்டதும், கல்லூரி படிப்பின் போதும், ஆசிரியப் பணியின்போதும் சாதியின் பெயரால் அவமானப்படுத்தப்பட்ட தொடர் சம்பவங்களும் அண்ணலின் நெஞ்சிலே ஆணிவேராய்ப் பதிந்தது, பின்னாளில் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தினை வடிவமைத்திட விதையிட்டது என்றால் அது மிகையில்லை.

கல்வியிலே பல உச்சங்களைத் தொட்டிருந்தாலும், தாய்நாட்டில் தீண்டாமை, சாதியப் பாகுபாடு, வருணாசிரமக் கொள்கை இவை முற்றிலுமாக

வேரறுக்கப்பட வேண்டும் என்பதிலே உறுதி பூண்டிருந்த அம்பேத்கர் அவர்கள் சமுதாய அமைப்பிலும், பொருளாதாரத்திலும் ஒடுக்கப்பட்டவர்கள் கையில் அதிகாரம் கிடைத்திடல் வேண்டும் என்கிற உயரிய நோக்கில், பட்டியல் சாதி மக்களுக்கென கழகம் ஒன்றைத் தொடங்கினார். ஜனநாயத்தில் வாக்குரிமை ஒன்றே ஏழை எளிய ஒடுக்கப்பட்ட மக்களுக்கான ஒளிக்கீற்று என்பதனை உணர்ந்து, இலண்டனில் நடைபெற்ற இரண்டாவது வட்டமேசை மாநாட்டில் வகுப்புவாரி பிரதிநிதித்துவம் குறித்த முக்கிய விவாதங்களில், தாழ்த்தப்பட்டோருக்குத் தனி வாக்குரிமையும், விகிதாசாரப் பிரதிநிதித்துவமும் வழங்கப்பட வேண்டுமென அம்பேத்கர் வலியுறுத்தினார்.

இந்திய விடுதலைக்குப் பின்னர் நாட்டின் முதலாவது சட்ட அமைச்சர், இந்திய அரசிலமைப்பை உருவாக்கும் ஆணையத்திற்கு தலைவர், பொருளாதாரம், அரசியல், வரலாறு, தத்துவம், சட்டம் ஆகிய துறைகளில் பாண்டித்தியம், ஆசிரியர், இதழாளர், எழுத்தாளர், சமூகநீதிப் புரட்சியாளர் எனப் பன்முகம் கொண்டவர். அண்ணல் அம்பேத்கர் அவர்களால் முன்மொழியப்பட்ட இந்திய அரசியலமைப்பு மிகச்சிறந்த சமூக ஆவணம் என்று வரலாற்று வியலாளரும் இந்திய அரசியலமைப்பினை நன்கு அறிந்தவருமான கிரான்வில்லா ஆஸ்டினால் பாராட்டப்பெற்றவர். அண்ணல் அம்பேத்கர் அவர்கள் பொருளாதாரத்தில் கொண்டிருந்த நிபுணத்துவத்தின் பயனாக இந்திய ரிசர்வ் வங்கி தோற்றுவிக்கப்பட்டது.[

தனது உழைப்பினால், படிப்பில், பல படைப்புகளில், சமுதாயப் பணியில் உச்சம் தொட்ட அண்ணல் அம்பேத்கர் 1956–ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 6–ஆம் தேதி இயற்கை எய்தி இறவாப்புகழ் பெற்ற அன்னாருக்கு, 1990–ஆம் ஆண்டு இந்தியாவின் மிக உயரிய விருதான பாரத ரத்னா விருது வழங்கிச் சிறப்பிக்கப்பட்டது.

சாதியத்திற்கெதிராக அயராது பணியாற்றிய 'பகுத்தறிவுப் பகலவன்' தந்தை பெரியாரிடம் அளவற்ற அன்பும் பற்றும் கொண்டிருந்த காரணத்தினால், அன்னாரின் அழைப்பினை ஏற்று, பலமுறை தமிழகமும், அம்பேத்கரின் அழைப்பினையேற்று தந்தை பெரியார் அவர்கள், மகாராஷ்டிரா மற்றும் பல்வேறு வட மாநிலங்களில் சமுக நீதி குறித்த விழிப்புணர்வு கூட்டங்களிலும், போராட்டங்களிலும் பங்கேற்றதும் வரலாறு. தமிழ் மொழியின் மீதும், தமிழ் மக்கள் மீதும் அண்ணல் அளவற்ற பற்றும் பாசமும் கொண்டிருந்தார். "தமிழ் மொழியானது தமிழகத்திற்கு மட்டுமின்றி, இந்தியா முழுமைக்குமான மொழி" என்று பெருமையோடு குறிப்பிட்டுள்ளார்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் டாக்டர் அம்பேத்கர் அவர்களைப் பற்றி குறிப்பிடும்போது "அடக்கப்பட்ட, ஒடுக்கப்பட்ட, தாழ்த்தப்பட்ட சமுதாயத்தின் நட்சத்திரமாக, கலங்கரை விளக்கமாக, அவர்களைக் கைதூக்கி விடுகின்ற காவலராகத் தோன்றியவர் அண்ணல் அம்பேத்கர்" என்று குறிப்பிட்டார். மேலும், அவரின் ஆட்சிக் காலத்தில், அண்ணல் அம்பேத்கருக்கு பெருமை சேர்க்கின்ற வகையில், சென்னை, வியாசர்பாடியில் 1972–ஆம் ஆண்டில் அண்ணல் அம்பேத்கர் பெயரில் கலைக் கல்லூரி, 1990–ஆம் ஆண்டு அம்பேத்கர் நூற்றாண்டினை முன்னிட்டு ஓராண்டு காலம் தொடர் விழாக் கொண்டாட்டம், இந்தியாவிலேயே முதன் முறையாக அம்பேத்கர் பெயரில் சட்டப் பல்கலைக்கழகம், **சென்னை அடையாறில் 10.6.2000 அன்று ரூபாய் நான்கு கோடி செலவில் 'அம்பேத்கர் மணிமண்டபம்'** எனப் பல திட்டங்களை நிறைவேற்றி அண்ணலுக்குப் பெருமை சேர்த்தார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள், பாரத ரத்னா டாக்டர் அம்பேத்கர் அவர்களைக் குறித்து "அறிவையும், கல்வியையும் ஆயுதமாக்கி முன்னேறுவதற்கு வழிகாட்டியவர் மாமேதை அம்பேத்கர் என்றும், சமத்துவம், ஜனநாயகம் ஆகிய இரண்டையும் தமது இரண்டு கண்களாகப் போற்றியவர் அம்பேத்கர்" என்றும் குறிப்பிட்டுள்ளார்.

**இந்தியாவின் சட்டமேதை 'பாரத ரத்னா' டாக்டர் அம்பேத்கர் அவர்களின் 132–ஆவது பிறந்த நாள் தமிழ்நாடு அரசின் சார்பில் 14.04.2022 அன்று சிறப்புடன் கொண்டாடப்பட உள்ளது. இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளார்கள்.**

.....

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in